பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 17 வியாழக்கிழமை 03.07.2025 கதிர் 236

### இனி இது ரகசியம் அல்ல!

சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்களின்படி, அடுத்த சில நாட்களில்முன்னாள்அமைச்சா்களான இரண்டு முக்கிய அரசியல்வாதிகள் கைது செய்யப்படவுள்ளார்கள். ☞ 2

# வடக்கு கிழக்கில் வனப்பகுதி எல்லைகள் மறுவரையறை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவனப்பகுதிகளின்எல்லைகளைவிரைவில் மறுவரையறை செய்யுமாறு வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனப்பாதுகாப்புத் துறைகள் உள்ளிட்ட தேசிய மற்றும் பிராந்திய அரசு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதிஅமைச்சர்அன்டன்ஜெயக்கொடி, வடக்கு மற்றும்கிழக்கில்உள்ளகாணிப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார், 'வனங்கள் என்று அறிவிக்கப்பட்ட சில வர்த்தமானிகளில் குறிப்பிட்ட இடங்களில் அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள் மற்றும் நகரங்களின் சில பகுதிகள்கூட அடங்கும். இந்தப் பகுதிகளில் சிலவற்றில், மக்கள் 30 முதல் 40 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்' என்றார் அமைச்சர்.

சில சந்தர்ப்பங்களில், பொதுமக்கள் பயன்படுத்தும் நிலங்கள் தெளிவாகக் குறிக்கப்பட்ட எல்லைகள் இல்லாமல் காடுகள் அல்லது வனஉயிரிகள் இருப்பிடங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். இதைத் தீர்க்க, பிரதேச செயலாளர்கள் (DS), கிராம அலுவலர்கள் (GS) ஆகியோருடன் ☞ 2

## குறிகாட்டுவானில் பொதுக் கழிப்பறை

இலங்கை முழுவதும் நகர்ப்புறங்களில் ரூ. 525.29 மில்லியன் செலவில் 20 சுகாதார வசதிஅமைப்புகளைநிர்மாணிப்பதற்கு அமைச்சரவைஒப்புதல்அளித்துள்ளது. இதற்கமைய தெற்கு யாத்திரிகளும் அதிகளவில் பயன்படுத்தும் குறிகாட்டுவானிலும் ஒரு பொதுக் கழிப்பறை அமைக்கப்படவுள்ளது.

நகர்ப்புறங்களுக்கு வருகைதரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ☞ 2

# செம்மணி ஆதாரச் சேகரிப்பை சர்வதேசமே செய்யவேண்டும்

## விக்னேஸ்வரன் திடீர் வலியுறுத்தல்



செம்மணியில் தற்போது மேற்கொள் ளப்பட்டுவரும் ஆதார சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வை இலங்கை அரசு அல்ல, சுயாதீன தடயவியல் குழுக்கள் அல்லது சர்வதேச நிபுணர்கள் கையாளவேண்டும் என்றுவலியுறுத்தியுள்ளார்வடக்குமாகாண சபையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்.

2021 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன் படி, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆதாரங்களை சேகரிக்க ,ஒருங்கிணைக்க,பகுப்பாய்வுசெய்யமற்றும் பாதுகாக்க சர்வதேச சமூகத்திற்கு ☞ 2

## விசாரணையைத் தவிர்த்த முன்னாள் அமைச்சர் ராஜித

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை அரசாங்க கொள்முதல் செயல்முறைகள் இல்லாமல் தன்னிச்சையாகவும் சட்டவிரோதமாகவும் கொரிய நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் அரசுக்குநட்டம்ஏற்படுத்தினார்எனக்கூறப்படும் முன்னாள் மீன்வள அமைச்சர் ராஜித ☞ 6

## எமனாக மாறிய அதிவேகம் 2 இளைஞர்கள் உயிரிழப்பு

புன்னாலைக்கட்டுவனிலிருந்துசுன்னாகம் நோக்கி பயணித்த இரண்டு இளைஞர்கள் மின்கம்பத்தில் மோதி உயிரிழந்தனர். வீதியின் குறுக்கே பாய்ந்த மாட்டுடன் மோதுவதைத் தடுக்க முயன்றபோது இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய மோட்டார் சைக்கிளை வாங்கிய மகிழ்ச்சியில் அதனை ஓட்டிச் சென்றபோது 17 மற்றும்18வயதான இந்த இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர். நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

அதி வேகத்தில் பயணித்த இளைஞர்கள் இருவரும் வீதியின் குறுக்கே வந்த மாட்டைக் கடப்பதற்காகத் முயற்சித்த போது எதிரே ☞ 2

செம்மணியில்

# இதுவரை 38 எலும்புகள்

## புதிய இடத்தில் தோண்டும் பணி ஆரம்பம்



யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் அகழ்வின்போது நேற்றுவரையில் மொத்தமாக 38 எலும்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனினும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்ட ☞ 2

# செம்மணிக்கு சலக ஒத்துழைப்பும் ஆளும்தரப்பின் சார்பில் தரப்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

செம்மணி - சித்துபாத்தி மனித புதைக்குழி விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வழக்கு விசாரணைகளுக்கு ஆளும்தரப்பின் சார்பில் வழங்கப்படக் கூடிய சகல ஒத்துழைப்புக்களும் வழங்கப்படுமென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் ☞ 6

## ஸ்ரீலங்கன் விமான நிறுவன மோசடிகளை விசாரிக்க குழு

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (தனியார்) கம்பனியில் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி விசேட விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான கம்பனியின் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக பங்களிப்பு வழங்கினாலும், ☞ 2

# பல மோசமான சம்பவங்களில் பிளையானுக்குத் தொடர்புண்டு

## ஆளும்தரப்பு எம்.பி. பிரபு தெரிவிப்பு

பிள்ளையான்போன்றவர்கள்இந்த நாட்டிலே இடம்பெற்ற பல மோசமான செயல்களில்சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்ற அடிப்படையில் இன்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அவை தொடர்பில்உரியதீர்மானம்சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் என தேசிய மக்கள்சக்திநாடாளுமன்றஉறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்புமாவட்டஅபிவிருத்திக் குழுக்கூட்டம்நேற்றுசெவ்வாய்க்கிழமை பழைய கச்சேரி மண்டபத்தில் அபிவிருத்திக் குழுத் தலைவரும்அமைச்சருமான சுனில்ஹந்துன்நெத்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கா, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால், நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரபு, ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, வைத்தியர் சிறிநாத், சாணக்கியன் மற்றும் மாவட்டச்செயலர் முரளிதரன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பிரதேசசபைத் தவிசாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போதுஅபிவிருத்திக்குழுவில்எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஊடகங்களுக்கு ☞ 6

## பெற்றோல் விலை சூத்திரத்தை நியாயப்படுத்திய ஆளும்தரப்பு

ஜனாதிபதிமற்றும்நாடாளுமன்றத்தேர்தல்களுக்கு முன்பாக எரிபொருள் விலைச் சூத்திரத்தைக் குறைகூறிய இன்றைய ஆளும்தரப்பினர் இன்று அதனை நியாயப்படுத்தத் தொடங்கியுள்ளனர். தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் இந்த முறைமையை நீக்குவோம் என்று தெரிவித்த அவர்கள், விலை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கின்றனர்.

விலைச் சூத்திரத்தின்படியே விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பதால் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்போது அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஜூனில் சராசரி விலை அதிகரித்தமையால் ஜூலையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜூலையில் சராசரி ☞ 6

# அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் பகடி வதையை விசாரிக்க அறிவுறுத்து

## பிரதமர் நேற்று வழங்கினார்

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணிஅமரசூரிய,இலங்கைமுழுவதும் உள்ளபல்கலைக்கழகஅமைப்புமற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களுக்குள் நடைபெறும் அனைத்து வகையான வன்முறைகளையும் விசாரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில், ராகிங் மற்றும் வளாக வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய பணிக்குழு ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அமைச்சர்களாக இருந்த காலத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய கதாபாத்திரங்களாக இருந்த இந்த இருவரும் கைது செய்யப்படுவது ஏறக்குறைய இறுதி செய்யப்பட்டுவிட்டது என்று அவர்கள் கூறுகின்றனர்.

லஞ்ச ஒழிப்பு ஆணையம் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையால் இந்த இரண்டு முக்கிய பிரமுகர்களும் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும், விசாரணையில் வெளிப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

........................

தெற்கில் உள்ள அரச அதிகாரிகளை தண்டனை இடமாற்றமாக வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்புவது என்பிபி ஆட்சியிலும் தொடர்கின்றது போலும்.

கஹவத்த அன்தான பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, கஹவத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இன்ஸ்பெக்டர் சுமித் கருணாரத்ன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இப்போது யாழ்ப்பாண பொலிஸ் பிரிவின் பொதுப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இளைஞரின் கொலையை விசாரிக்க அங்கே, கொழும்பு சிறப்பு பொலிஸ் குழு உட்பட ஐந்து பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜூன் 30 இரவு, கஹவத்த அன்தான கொஸ்கெல்ல பகுதியில், கஹவத்த புங்கிரிய பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். காவல்துறை அதிகாரிகள் போல் வேடமிட்ட ஒரு குழு இந்தக் கொலையைச் செய்துள்ளது.

இமந்த சுரஞ்சன் என்ற 22 வயது இளைஞர் கொல்லப்பட்டார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மற்றொரு இளைஞர் காயமடைந்தார், இது தொடர்பிலான விசாரணைகளை தடையின்றி நடத்துவதற்கு ஏதுவாக இந்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், ஒரு சிங்கள இளைஞனையே ஈவு இரக்கமற்று கொலை செய்த சம்பத்தோடு தொடர்புபட்டிருந்தார் என்று நம்பப்படும் ஒருவரை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவது என்பது எந்தவகையில் சரியானது என்கிற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

வடக்கு, கிழக்கில் இது போன்ற பல கொலைகள் முன்னர் இடம்பெற்றுள்ளன. அதில் சில கொலைகளுக்கு நீதிமன்றம் தண்டனையும் வழங்கியுள்ளது. அப்படியிருந்தும் யாழ்ப்பாணத்தையும் வடக்கு கிழக்கையும் இன்னும் தண்டனை இடமாற்றத்திற்கான பகுதிகள் போன்று தெற்கு அதிகாரிகள் வைத்திருப்பது கண்டிக்கப்படவேண்டியது. தமது பகுதிகளைப் பாதுகாப்பானதாக வைத்திருப்பதற்காக ஆபத்தான அதிகாரிகளை வடக்கு கிழக்குகிற்கு அனுப்பும் போக்கு நிறுத்தப்படவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணி ஆதாரச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் உள்ளது. ஐ.நா. தான் வைத்திருக்கும் ஆணையைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கேள்வி, பதில் என்ற பெயரில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்மணியில் உள்ள ஒரு மனிதப் புதைகுழி தோண்டியெடுக்கப்பட்டது, மனித உரிமைகள் குறித்தும் போரின் போது அப்பாவி தமிழ் மக்களின் அவலநிலை குறித்தும் அக்கறை கொண்டவர்களின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஜூலை, 1998 இல், தமிழ் பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலையில் ஈடுபட்டதற்காக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டார், மேலும் அவரைத் தேட வந்த நான்கு பேர் கொல்லப்பட்டனர். தனது விசாரணையின் போது, செம்மணிக்கு அருகிலுள்ள ஒரு மனிதப் புதைகுழியில் சுமார் நானூறு பாதிக்கப்பட்டவர்களின் அடக்கங்களில் தனக்கும் தொடர்பு இருப்பதாக ராஜபக்ச வெளிப்படுத்தினார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செம்மணியில் உள்ள ஒரு மனிதப் புதைகுழி தோண்டியெடுப்பின் இரண்டாம் கட்டத்தின் 6ஆவது நாளில், குழந்தைகளின் எலும்புக்கூடுகள் உட்பட மேலும் பல எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று யுனிசெஃப் விநியோகித்த ஒரு தனித்துவமான நீல நிற பள்ளிப் பை மற்றும் ஒரு பொம்மையுடன் தெளிவாகப் புதைக்கப்பட்டமை தெரிகிறது.

இதுவரை, அகழ்வாராய்ச்சியில் 33 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இவை அனைத்தும் எடுக்கப்பட்டு அரசு சட்ட மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, மனித உரிமை ஆர்வலர்கள் இந்த எலும்புக்கூடு சான்றுகள் சிதைத்து அழிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து கவலை தெரிவித்துள்ளனர். எனவே, அகழ்வாராய்ச்சியிலிருந்து ஆய்வகம் வரை இந்த மனித எச்சங்களை யார் கையாண்டார்கள் என்பதற்கான தெளிவான ஆவணங்கள் அவசியம். இவற்றின் காவல் வலையமைப்பு, தொடர் சங்கிலி மீது உடனடியாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். இல்லையெனில், தடயவியல் முடிவுகள் சட்டப்பூர்வமாக பலவீனமடையும்.

சர்வதேச மேற்பார்வையின் கீழ் தோண்டப்பட்ட எலும்புக்கூடுகளைப் பாதுகாக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தவேண்டும். இலங்கை அரசு அல்ல, சுயாதீன தடயவியல் குழுக்கள் அல்லது சர்வதேச நிபுணர்கள் ஆதார சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வைக் கையாள வேண்டும்.

2021 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன் படி, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆதாரங்களை சேகரிக்க, ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்க சர்வதேச சமூகத்திற்கு அதிகாரம் உள்ளது. ஐ.நா. தான் வைத்திருக்கும் ஆணையைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது.

1998 இல் ராஜபக்சேவின் சாட்சியம், பல செய்தி நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் அரசு சாரா நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்டதிலிருந்து, செம்மணியில் ஒரு பெரிய புதைகுழி இருப்பதை உலகம் அறிந்திருக்கிறது. ஆனாலும், இப்போதுதான் அது தோண்டப்படுகிறது. இப்போதும்கூட, ஆதாரங்கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளது.

ஐ.நா.வின் செயலற்ற தன்மையின் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. இன்று, இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம், தற்போதைய புதைகுழி தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் முறையாக சேகரித்து, ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்து, தீர்மானம் 46/1 இன் ஆணைக்குள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானம் 46/1 இன் இணை அனுசரணையாளராகவும், இலங்கையில் நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வரலாற்றுப் பொறுப்பைக் கொண்ட நாடாகவும், ஐக்கிய இராச்சியம் இந்த பிரச்சினையில் முன்னிலை வகிக்க வேண்டும்.

செம்மணி படுகொலையின் குற்றவாளிகள் மற்றும் அதைப் போன்றவர்கள் அடையாளம் காணப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய இப்போது ஒரு சர்வதேச விசாரணை திறக்கப்பட வேண்டும். இது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும்.

தமிழ் மக்கள் அமைதியாக இருக்கக்கூடாது. நீதிக்கான ஒவ்வொரு வழியும் நிறைவேற்றப்படும் வரை அவர்கள் ஓய்வெடுக்கக்கூடாது - என்றுள்ளது.

## இதுவரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புகள் கூட்டாக ஒன்றோடொன்று சிக்கிய வகையில் காணப்படுவதால் அதில் எத்தனை இருக்கின்றன என்பதை உறுதியாகக் கணக்கிடுவதில் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையில் 30 மனித என்புத்தொகுதிகள் முழுமையாகத் தோண்டியெடுககப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 4 என்புக்கூடுகள் நேற்று அடையாளம் காணப்பட்டன. அவரை ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்திருப்பதன் காரணமாக அதிலிருக்கும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையை அவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு எலும்புக்கூடுகளாக அகற்றப்படும்போதே அதற்குள்ளிருக்கும் உண்மையான எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை சரியாகத் தெரியவரும்.

இதேவேளை, இதுவரை அகழப்பட்டவற்றிலும் பார்க்கப் பெரிய குழியாக இருக்கக்கூடும் என்றும் அதிகளவில் சடலங்களைக் கொண்டிருக்கக்கூடும் என்றும் கருதப்படும் 4ஆவது தொகுதியை மேல் மண் படையைத் தோண்டும் பணிகள் நேற்றுத் தொடங்கப்பட்டன. இந்தப் பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்களும் சேர்ந்துள்ளனர்.

நேற்றைய அகழ்வுப் பணிகள் குறித்து, காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பில் அங்கிருந்த சட்டத்தரணி ரணித்தா தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் - செம்மணி, சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து, இதுவரை 38 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் 30 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இன்று அடையாளம் காணப்பட்டுள்ள, 4 என்புக்கூட்டுத் தொகுதிகள் பின்னிப்பிணைந்த நிலையில் காணப்படுகிறன.

செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் புதைகுழி இருக்கலாம் என சந்தேகத்தில் இன்றைய தினம் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்

செம்மணி- சித்துபாத்தி பகுதியில் இனங்காணப்பட்ட மனித புதைக்குழியில் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் 8ஆவது நாள் அகழ்வுப் பணிகள் இன்று இடம்பெறும். கடந்த வாரம் சிறுவர்கள் பயன்படுத்தக் கூடியவாறான நீல நிற பையொன்று மீட்கப்பட்ட நிலையில், செவ்வாய்க்கிழமை சிறுவர்களின் விளையாட்டு பொம்மை, காலணி ஒன்று என்பனவும் மீட்கப்பட்டன.

## குறிகாட்டுவானில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தக்கூடிய போதுமான கழிப்பறை வசதிகள் இல்லாததால், தரமான கழிப்பறை அமைப்புகள் உட்பட சுகாதார வசதிகளை நிர்மாணிக்க முடிவு செய்துள்ளதாக ஆளும்தரப்பு கூறுகிறது. எனினும் குறிகாட்டுவான் என்பது நகரத்தில் அமைந்துள்ள ஓரிடமல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின்படி, நகர மேம்பாட்டு ஆணையத்தால் முன்மொழியப்பட்ட வசதிகளை நிறுவுவதற்கு பொருத்தமான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

அதன்படி, பின்வரும் இடங்களில் முன்மொழியப்பட்ட சுகாதார வசதி அமைப்புகள் கட்டுமானத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தெமோதர ரயில் நிலையம், சிகிரியா ஹோட்டல் சந்தி, நுவார/கண்டி ஏரி சர்க்கஸ், கிரிகோரி லேக் - நுவரெலியா, கிண்ணியா கடற்கரை -திருகோணமலை, மார்பிள் பீச் - திருகோணமலை, நிலாவெளி கரையோரப் பகுதி - திருகோணமலை, பாசிக்குடா - மட்டக்களப்பு, ருவன்வெலிசேய வாகன நிறுத்துமிடம் -லங்காபுர பொலன்னறுவை, யாழ்ப்பாணம் குறிக்காட்டுவான் துறைமுக வளாகம், ஹிக்கடுவ கரையோரப் பகுதி - ஹிரிகட்டிய, திக்வெல்ல பரேவெல்ல கரையோரப் பூங்கா, தங்காலை ஒன்பது வளைவு பாலம், எல்ல மொரகொல்ல கடற்கரை, பேருவளை கல்கிசை ரயில் நிலையம் நீர்கொழும்பு கோஸ்டல் பார்க் திட்டம், கட்டம் ணூ பத்தரமுல்ல சந்தி, படகமுவ காட்டுப் பகுதி, குருநாகல்.

## அனைத்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களிடம் பேசிய பிரதமர் ஹரினி, நடைமுறை பரிந்துரைகளை உருவாக்கி, இந்தப் பிரச்சினைகளைத் தடுக்க உடனடி நடவடிக்கையைத் தொடங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மூன்று ஆண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்ட பணிக்குழுவிற்கு, கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களால் ஏற்படும் வன்முறை சம்பவங்களை ஆராய்ந்து, பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான அதிகாரம் ஆளும்தரப்பின் ஆதரவுடன் அளிக்கப்படும் என்று அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

பணிக்குழுவின் பிரதிநிதிகள், உயர் கல்வியில் வன்முறைக்கு பங்களிக்கும் பல காரணிகளை எடுத்துரைத்தனர், இதில் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே சரியான உறவுகள் இல்லாதது, ராகிங் குறித்த மாணவர்களின் நச்சு மனப்பான்மை மற்றும் மரியாதை கோர அல்லது அதிகாரத்தை உறுதிப்படுத்த வன்முறையை தவறாகப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும். கல்வி அழுத்தத்தால் உருவாக்கப்பட்ட மன அழுத்தம் மற்றும் பீடங்களுக்குள் உள்ள அதிகார இயக்கவியல் ஆகியவற்றையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வன்முறையைச் சமாளிக்கப் புதுப்பிக்கப்பட்ட சட்ட கட்டமைப்புகள் மற்றும் வழிமுறைகள் மற்றும் மனநிலையை மாற்றும் திட்டங்களுக்கு அழைப்பு விடுத்து, குறுகிய கால மற்றும் நீண்ட கால உத்திகள் இரண்டின் அவசியத்தையும் பிரதமர் அமரசூரிய வலியுறுத்தினார். சட்ட நடவடிக்கை மட்டும் போதாது என்றும், தடுப்பு கல்வி நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கூட்டத்தில் உரையாற்றிய கல்வி மற்றும் உயர்கல்வி துணை அமைச்சர் மதுரா செனவிரத்ன, எந்தவொரு வன்முறைக்கும் ஆளாகும் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக்காட்டினார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து வனஉயிரிகள் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களங்கள் செயற்பட்டு உண்மையான எல்லைகளை வரையறுக்க ஒன்றிணைந்து பணியாற்றவும், பின்னர் அதற்கேற்ப தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்புகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கில் நிலவும் நிலப் பிரச்சினைகள் கடந்த கால உள்நாட்டு போருடனும், அங்கு வசிக்கும் மக்களின் போராட்டங்களுடனும் தொடர்புடையவை. மோதலின்போது பல குடும்பங்கள் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் இழந்தன, மோதல் முடிவடைந்து பல வருடங்கள் ஆன பிறகும், சிலர் அவற்றை மீட்டெடுக்க இன்னும் போராடி வருகின்றனர். சில நிலங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன, மற்றவை பல்வேறு அரசுத் துறைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்தடுத்த ஆளும்தரப்புக்கள் இந்த நிலங்களின் சில பகுதிகளை திருப்பித் தந்துள்ளன, ஆனால், பலர் இன்னும் தங்கள் நிலங்கள் திரும்பக் கிடைக்கவில்லை என்று குறைப்படுகின்றனர் - என்றார் அவர்.

## எமனாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த மின்சார கம்பத்துடன் மோதியதில் இருவரும் தூக்கிவீசப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் திங்கட்கிழமையே மோட்டார்சைக்கிள் ஒன்றினை வாங்கியுள்ளார். அந்த மகிழ்ச்சியில் சென்றபோதே விபத்து நிகழ்ந்துள்ளது.

## ஸ்ரீலங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை மேற்கொண்டு நடத்திச் செல்வதற்கு அரசுக்கு அதிக செலவுச்சுமை ஏற்பட்டுள்ளமையால், குறித்த கம்பனிக்கு ஆண்டுதோறும் ஏற்படுகின்ற அதிக நட்டத்தை தாங்கிக்கொள்வதற்கு சிரமமங்கள் தோன்றியுள்ளன.

இக்கம்பனியை பொருளாதார ரீதியாக அனுகூலங்களுடனும், வினைத்திறனாகவும், பயனுறுவாய்ந்த அரச நிறுவனமாக மாற்றியமைத்து, நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி வெற்றிகரமாக மேற்கொண்டு நடாத்திச் செல்வதே பொதுமக்களின் விருப்பாகவுள்ளது.

அதற்காக, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான கம்பனிக்கு சமகால நிலைமை ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் தொடர்பாக கடந்த காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள பரிவர்த்தனைகள் மற்றும் சம்பவங்கள் பற்றி முறையான ஆய்வு மற்றும் மதிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் விமானநிலைய தொழிற்பாடுகள் தொடர்பாக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# 14 சந்தர்ப்பங்களில் 1000 கொள்கலன்கள் சோதனை ஏதுமின்றி விடுவிக்கப்பட்டன

## அமைச்சரவை பேச்சாளர் தகவல்

நாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் துறைமுகங்களில் கொள்கலன்களை விடுவிப்பதில் நெரிசல் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் இதற்கு முன்னர் 14 சந்தர்ப்பங்களில் சுமார் 1000க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளன. கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொள்கலன் விடுவிப்பில் அமைச்சர்களால் அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்படுவது உண்மைக்கு புறம்பானதாகும். அவ்வாறு எங்கும் தெரிவிக்கப்படவில்லை. ஒரு சிலரால் எவ்வித அடிப்படையுமின்றி இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிவப்பு நிற லேபல் ஒட்டப்பட்ட கொள்கலன்கள் ஸ்கேன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

மஞ்சள் நிற லேபல் ஒட்டப்பட்டவை ஸ்கேன் பரிசோதனைக்கு அல்லது அவற்றிலுள்ள பொருட்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். பச்சை நிற லேபல் ஒட்டப்பட்டவை பரிசோதனைகள் இன்றி, ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு விடுவிக்கப்படக் கூடியவையாகும்.

நாட்டில் வருட இறுதியில் அல்லது புத்தாண்டு காலத்தில் கொள்கலன் விடுவிப்பில் இவ்வாறான நெறிசல்கள் ஏற்படுவது இயல்பானதாகும். சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவின் பரிந்துரைக்கமையவே கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

இந்நிலையில் அண்மையில் எவ்வித பரிசோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கொள்கலன்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியதால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஜனவரி 30 ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. திறைசேரியின் பிரதி செயலாளர் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினால் சில பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. கொள்கலன் விடுவிப்பினால் தேசியபாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா? சுகாதாரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் உறுதியாகக் கூறமுடியாது. சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கமைய இதற்கு முன்னர் இவ்வாறு 14 சந்தர்ப்பங்களில் சுமார் 1000க்கும் அதிகமான கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இவற்றால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா அல்லது ஆளும் தரப்பின் நிதி நிலைமையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு கணக்காய்வொன்று நடத்தப்படவேண்டும் என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு பரிந்துரைத்துள்ளது. அதேபோன்று எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கான பரிந்துரைகளும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கையை முழுமையாக மீளாய்வு செய்த பின்னர் அவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொள்கலன் நெறிசல் ஏற்படும் பட்சத்தில் அவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பான மாற்றுவழியொன்று நாட்டில் இல்லை. இவ்வாறான நிலைமைகள் ஏற்படும் போது எடுக்கப்படக் கூடிய தீர்மானங்கள் தொடர்பில் பரிந்துரைப்பதற்காகவே சுங்க பணிப்பாளரால் குழுவொன்று நியமிக்கப்படுகிறது. அதற்கமையவே கொள்கலன்கள் விடுவிக்கப்படுகின்றன என்றார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வன எல்லை மறுபரிசீலனை மக்கள் உரிமையை மதியுங்கள்

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஆண்டுகளுக்குப் பிறகு இயல்பு நிலை திரும்பியிருக்கின்ற நிலையிலும், அப்பகுதியினைச் சேர்ந்த மக்கள் இன்னும் தங்கள் சொந்தமான நிலங்களை மீட்டெடுக்க முடியாமல் போராடிக் கொண்டிருக்கின்றனர். அண்மையில் அதிகரித்துவரும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று, வனவளத் திணைக்களம் மற்றும் வனவிலங்குத் திணைக்களம் மேற்கொண்டு வரும் நில அபகரிப்பு நடவடிக்கைகள். பெரும்பாலும், இந்த இரண்டு திணைக்களங்களின் அதிகாரிகள், தொலைதூரத்தில் உள்ள கொழும்பிலிருந்து நிலம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். செய்மதிப் படங்கள் (Satellite Images) போன்ற தொழில்நுட்பங்களின் அடிப்படையில் எல்லைகள் வரையறுத்து, மக்களின் வாழ்விடங்களும் நிலங்களும் 'வனப் பகுதியில்' அடங்கியுள்ளதாக அறிவிக்கின்றனர்.

இது வெறும் தொழில்நுட்பத் தவறாக மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை முடுக்கிக் கட்டும் செயற்பாடாக மாறியுள்ளது. ஏற்கனவே நிலங்களைக் கைவிட்டுவிட்டு அகதியாக வாழ்ந்தவர்கள், இனி மீண்டும் தங்கள் வீட்டுத் தோப்புகளுக்குத் திரும்ப முடியாமல் சட்டரீதியாக தடைபட்டுப் போயிருக்கிறார்கள். இது, குடியுரிமை மற்றும் உரிமை சார்ந்த கேள்விகளை எழுப்புகிறது. குறிப்பாகத் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இந்தச் சூழ்நிலை அதிகம் காணப்படுவதால், இது திட்டமிட்ட இனப் பாகுபாடாகவே பலர் பார்க்கின்றனர்.

இந்த சூழ்நிலையைத் தீர்க்கும் நோக்குடன் ஆளும்தரப்பு சமீபத்தில் 'வன எல்லைகளை மீளாய்வு செய்யவுள்ளதாக' அறிவித்திருப்பது ஒருவகையில் நேர்மறையான முன்னேற்றமாகக் காணலாம். இருப்பினும், கடந்த கால அனுபவங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவெனில், அரசின் பல அறிவிப்புகள் நடைமுறையில் மேற்கொள்ளப்படாமல் கண்துடைப்பாகவே முடிந்துவிடுகின்றன.

எனவே இந்த அறிவிப்பு ஒரு புதிய நீதிகரமான அணுகுமுறையின் தொடக்கமாக அமைய வேண்டுமென்றால், கீழ்க்காணும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்:

1. மூலதனதாரர்களை மட்டுமல்ல, உள்ளூர் மக்களையும் உடனடியாக உள்ளடக்கிய கூட்டுத்திட்டமிடல் குழு உருவாக்கப்பட வேண்டும்.

2. நிகழ்நிலை ஆய்வுகள் (Field Verification) தவிர்க்க முடியாத கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும். செய்மதிப் படங்கள் மட்டுமே அடிப்படையாக இருக்கக் கூடாது.

3. மக்களின் சொத்துரிமை ஆவணங்கள், வரலாற்றுச் சான்றுகள், கிராம உத்தியோகத்தர் மற்றும் நில பதிவாளர் அலுவலகங்களின் ஆவணங்கள் அனைத்தும் முழுமையாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

4. முந்தைய அபகரிப்புகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இதனுடன், நிலவிவகாரங்களில் நீதியை நிலைநிறுத்துவதே அரசின் தலையாய பொறுப்பாகும். மக்களுடைய சொத்துரிமையை பாதுகாக்கும் அரசின் முயற்சியே நல்லாட்சிக்கு அடையாளமாக அமையும்.

எல்லைகளை வரையறுப்பது என்பது வரைபட ரீதியாக மட்டுமல்ல, அது மக்களின் வாழ்வையும் வரலாறையும் நெகிழவைக்கும் செயல். எனவே, தற்போது அறிவிக்கப்பட்ட வன எல்லை மீளாய்வு நடவடிக்கைகள், கண்துடைப்பாக இல்லாமல், மக்கள் நம்பிக்கைக்கு உரியவையாகவும், நீதிக்குரியவையாகவும் அமைய வேண்டும்.

வனங்களை பாதுகாக்கும் முயற்சி உண்மையில் அவசியமான ஒன்று. ஆனால், அது மக்களை வனத்திற்குள் தள்ளிச் சென்று அவர்களின் வாழ்வை அழிக்கக்கூடாது. மனிதன் மற்றும் இயற்கை இடையே சமநிலை பேணும் ஆளுமை மட்டுமே நமது நாட்டிற்கு நீடித்த அமைதியையும் சமூக நியாயத்தையும் வழங்கும்.

## உயர் தரத்தில் திறமைச் சித்தி பெற்றோருக்கு வெளிநாட்டு பட்டப்படிப்புக்கு புலமைப் பரிசில்

### அறிமுகப்படுத்த உள்ளது ஆளும்தரப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் உயர்வான தேர்ச்சியைப் பெறுகின்ற மாணவர்கள் தமது முதலாவது பட்டப்படிப்பை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்ற புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடனத்திற்கமைய 'நாகரிகமான பிரஜை - முன்னேற்றகரமான மனிதவளத்தை' உருவாக்கும் நோக்கத்தை அடைவதற்காக உயர்தர பரீட்சையில் உயர்வான தேர்ச்சியைப் பெறுகின்ற மாணவர்கள் தமது முதலாவது பட்டப்படிப்பை சர்வதேச ரீதியாக உயர் தரப்படுத்தலுடன் கூடிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்குத் தேவையான புலமைப்பரிசிலை வழங்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2025ஆம் ஆண்டுவரவு செலவுத்திட்ட யோசனைமூலம் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச தரப்படுத்தல் குறிகாட்டிகளில் முதல் 500 இடங்களைப் பிடித்துள்ள, ஆங்கில மொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் 4 ஆண்டுகள் பட்டப்படிப்புக்களைப் பூர்த்தி செய்வதற்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதலாம் கட்டத்தின் கீழ் 2025 ஆண்டுக்காக 20 தொடக்கம் 50 மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்;க்கப்படுகின்றது. உயர்தர பரீட்சையில் பிரதான பாடத்துறைகளின் கீழ் உயர்வான இசட் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

குறித்த விண்ணப்பங்களில் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் கூடிய தேர்ச்சிக்கான நேர்முகத் தேர்வுக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய, உத்தேச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அமெரிக்காவின் வரி விதிப்பில் ஜூலை 9க்கு முன்னர் திருத்தம்

### நம்பிக்கை வெளியிட்ட அமைச்சர்

இலங்கையின் பொருட்களுக்கு வரி விதிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வழங்கிய கால அவகாசம் ஜூலை 9ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. அதற்கு முன்னர் இலங்கைக்கு சலுகை கிடைக்கக்கூடியவாறு அவரால் அறிவிக்கப்பட்ட வரி கொள்கைகளில் திருத்தங்களை ஏற்படுத்த முடியும் என்று நம்புவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த வரி கொள்கையால் இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் திகைப்படைந்தது. இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஜூலை 9 அந்தக் கால அவகாசம் நிறைவடைகிறது. இதனால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காக நிதி அமைச்சின் தலையீட்டுடன் பல சுற்று பேச்சு முன்னெடுக்கப்பட்டன.

அமெரிக்காவின் வர்த்தகத் திணைக்களத்துடன் மெய்நிகர் ஊடாக பல்வேறு பேச்சு நடத்தப்பட்டது. அது மாத்திரமின்றி எமது பிரதிநிதிகள் குழு இரு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கிறது. ஜூலை 9க்கு முன்னர் இலங்கை நிவாரணமொன்று கிடைக்கக்கூடிய நிலைமையை அடைய முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

எம்மால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கமைய 9ஆம் திகதி இந்த வரிக் கொள்கையில் எமக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு திருத்தங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

இலங்கை சார்பில் ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் பிரதிபலனாக எமக்கு சலுகை கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## முகநூலில் புண்படுத்தும் மொழியை பயன்படுத்தினால் இனி சட்டம் பாயும்

### பொலிஸார் எச்சரிக்கை

பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் கருத்து தெரிவிக்கும்போது புண்படுத்தும் அல்லது தவறான மொழி பயன்பாட்டை மேற்கொள்ளும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை கவனத்தில் கொண்டு, இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை பொலிஸார் செயல்படுத்துவதாக ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கருத்துகள் மரியாதைக்குரிய மற்றும் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை பொலிஸாரின் அதிகார பூர்வ முகநூல் பக்கத்தில் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள கண்ணியமான மொழியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்












## ஸ்ரீலங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) (தனியார்) கம்பனியின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை பற்றி பல்வேறு தரப்பினர்களும் அரசின்கவனத்திற்குக்கொண்டுவந்துள்ளனர்.

அதற்கமைய, 2010 - 2025 காலப்பகுதியில்மேற்குறிப்பிட்டநிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கருத்தப்படும் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகளைக் கண்டறிந்து விபரங்களுடன் கூடிய விதந்துரைகள்அடங்கியஅறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காகமுன்னாள்கணக்காய்வாளர் தலைமை அதிபதி எச்.எம்.காமினி விஜேசிங்க தலைமையிலான ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை குறையும் பட்சத்தில், ஓகஸ்ட்டில் விலை குறைவடையும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் களஞ்சியசாலை தொடர்பில் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்குத்தெரியும். அதற்கமையஎரிபொருள்கையிருப்புதொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் செய்தியாளர்கள் சந்திப்பிலும், ஊடக அறிக்கை ஊடாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த வாரம் இது குறித்து எம்மிடம் கேட்கப்பட்டபோது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் அடுத்த இரு மாதங்களுக்கான எரிபொருள் கையிருப்பு காணப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் தேவைக்கு அதிகமாக எரிபொருட்களை கொள்வனவு செய்து அவற்றை பதுக்க ஆரம்பித்தனர். எனினும் தற்போது அவ்வாறான நிலைமை இல்லை. எதிர்வரும் இரு மாதங்களுக்கான எரிபொருள் கையிருப்பிலுள்ளது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒவ்வொரு மாத இறுதியிலும் அடுத்த மாதத்துக்கான எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய விலை கணிப்பிடப்படும். ஜூலை மாத எரிபொருள் விலைக்காக ஜூன் 30ஆம்திகதிகணிப்பீடுஇடம்பெற்றது. சர்வதேச சந்தையில் ஜூன் மாதத்தில் காணப்படும் எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டே ஜூலை மாதத்துக்கான விலையும் தீர்மானிக்கப்படும். மாறாக ஏப்ரல் அல்லது மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டு ஜூலை மாதத்துக்கான விலை தீர்மானிக்கப்படுவதில்லை.

விலைச் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டேவிலைகள்தீர்மானிக்கப்படுகின்றன. எனவே விலைகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்போது அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். சர்வதேசசந்தையில் ஜூனில் சராசரி விலை அதிகரித்தமையால் ஜூலையில் இங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் ஜூலையில் சராசரி விலை குறையும் பட்சத்தில், ஓகஸ்ட்டில் இங்கு விலை குறைவடையும். கடந்த காலங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றிருக்காவிட்டால் தற்போது மக்களுக்கு எரிபொருள் விலைகளில் நிவாரணங்களை வழங்கியிருக்க முடியும்.

எரிபொருள் விலை, மின் கட்டணம் என்பன அதிகரிக்கும் வேகத்தில் ஏனைய சேவைகளுக்கான கட்டணங்களும் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் விலைகள், சேவைக் கட்டணங்கள் குறையும் போது பொருட்களின் விலைகள் குறைவடைவதில்லை. எனவே அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு ஏதேனுமொரு வகையில் நிவாரணத்தை வழங்க முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

பொருட்களின் விலைகள் மற்றும் சேவை கட்டண விவகாரத்தில் அனைத்திலும் அரசாங்கத்தால் தலையிட முடியாது. எனவே அந்தந்த துறையினர் அவற்றில் அவதானம் செலுத்தவேண்டும். 6மாதங்களுக்கொருமுறை பேரூந்து கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜூன் 30 நடைமுறைப்படுத்தப்படவிருந்த பேரூந்து கட்டண திருத்தத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பால் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் கட்டண குறைப்பு போதுமானதல்ல என்றார்.

## விசாரணையைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாரத்ன, நேற்று உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் லஞ்ச ஒழிப்பு ஆணையத்தில் ஆஜராக முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சிறப்பு விசாரணை எண். 01லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் தலைமை ஆய்வாளர் திரு. ராஜித சேனாரத்னவை இன்று காலை 9.00 மணிக்கு லஞ்ச ஒழிப்பு ஆணையத்தில் வந்து சம்பவம்தொடர்பாகவாக்குமூலம்அளிக்குமாறு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

ராஜித சேனாரத்னவின் வழக்கறிஞர் ஒருவர் காலை லஞ்ச ஒழிப்பு ஆணையத்திற்கு வந்து, ராஜித சேனாரத்ன உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் விசாரணையில் பங்கேற்க முடியாது என்று கடிதம் அளித்தார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டு, கொழும்புதலைமைநீதவான்தனுஜாலக்மாலி ஜெயதுங்க முன்னிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று லஞ்ச ஒழிப்பு ஆணையம் ஜூன் 27 தெரிவித்திருந்தது.

## செம்மணிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

செம்மணி - மனிதப் புதைக்குழி தொடர்பில் ஜூன் 29 வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இது தொடர்பில் அரசு அறிக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சினால் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வழக்கு விசாரணைகளுக்கு ஆளும்தரப்பின் சார்பில் வழங்கப்படக் கூடிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்.

நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதால் எம்மால் வேறு கருத்துக்கள் எதனையும் வெளியிடமுடியாது. எவ்வாறிருப்பினும் இது குறித்த தகவல்கள் ஆளும்தரப்பின் சார்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## பல மோசமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு என்ற வகையில் நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதனடிப்படையில் மட்டக்களப்பில் பெருந்தெருக்கள் மற்றும் போக்குவரத்து விமானபோக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் உள்ள அபிவிருத்தி தொடர்பாகவும் பல திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பால் எந்தவோரு செயற்பாடுகளையும் செயல்படுத்த முடியாது எனக் கூக்குரல் இட்டு திரிந்த எதிர்கட்சியினர் இன்று அடங்கி போய் இருக்கின்றனர். இன்று சிறுபோக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்மானிப்பதற்குகூட முடியாத நிலையில்தான் ஆளும்தரப்புக்கள் இருந்தன. ஆனால் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நாட்டை பெறுப்பேற்ற பின்னர் நெல்லுக்கான நிர்ணய விலையை 120 ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் அதனை கொள்வனவு செய்வதற்காக 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக நீதி அமைச்சர் கலந்து ஆலோசித்து வருகின்றார். அதனை திருத்துவது தொடர்பாக சட்டத்தரணிகள், சமூக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களுடன் கடந்த வாரம் கலந்துரையாடியுள்ளார். அதனை மறுசீரமைக்க கலந்தாலோசித்துள்ளோம்.

பிள்ளையான் போன்றவர்கள் இந்த நாட்டிலே பல மோசமான செயல்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக இன்று விசாரணைகள் மோற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கான விசாரணையில் எந்த முடிவு வருகின்றதோ அந்த அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அது சட்டரீதியாக இடம்பெறும்.

தேசியமக்கள்சக்திமக்களின்நலன்சார்ந்த பணியை முன்னெடுத்துவரும் ஆளும்தரப்பு மக்களின் ஆதரவுடன் நீடித்து பயணிக்கும் என எதிர்கட்சியினருக்கு நாங்கள் சவால் விடுகின்றோம். - என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2025இல் வெளியிடப்பெற்றது